**O.S. No.214/2018**
**D.W. 1 - திரு. ஆறுமுகம்**
**நாள் : 04.02.2026.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நானும், 1ம் வாதியும் சேர்ந்து பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்த தான் வா.சா.ஆ.1 ஆவணம் என்றால், சரிதான். அந்த ஆவணத்தில் பணம் பற்றுகள் விபரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கும் 1ம் வாதிக்கும் இடையே உறுதிமொழி பத்திரம் ஏற்பட்டது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அதன் அசலை காவல்நிலையத்தில் பெற்றுக்கொண்டார்கள். மேற்படி அசல் பத்திரம் காவல்நிலையத்தில் உள்ளதாக என்னுடைய எதிர்வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. 08.03.2013ம் தேதியியல் ஏற்படுத்திக்கொண்ட உறுதிமொழி பத்திரத்தின் அடிப்படையில் கிரைய பத்திரத்தை பதிவு செய்து கொள்ளுமாறு எழுத்து பூர்வமான அறிவிப்பு அனுப்பினீர்களா என்றால், இல்லை. என் மீது 06.04.2016ம் தேதி 1ம் வாதி, மத்திய குற்றபிரிவு காவல்துறையில் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேற்படி 06.04.2016ம் தேதியின் புகார் அடிப்படையில் போலீஸார் என்னை அழைத்து விசாரித்தனர். அதன்பிறகும் மேற்படி உறுதிமொழி பத்திரத்தின் அடிப்படையில் 1ம் வாதிக்கு அறிவிப்பு அனுப்பி கிரையம் பத்திரத்தை முடிக்க வேண்டும் என்று கேட்கவில்லை என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.1 ஆவணத்தை ரத்து செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. **பி.சா.ஆ.3 முதல் 5** வரையான காசோலைகள் மேற்படி உறுதிமொழி பத்திரத்தின் அடிப்படையில் தான் 1ம் வாதி எனக்கு கொடுத்தார் என்பதை காட்ட ஆவணங்கள் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். **வா.சா.ஆ.1** கிரைய ஒப்பந்த பத்திரம் தான் உண்மையான ஆவணம் என்றும், நான் 1ம் வாதியிடம் அதிக பணம் பெறுவதற்காக கிரையத்தை முடித்து கொடுக்காமல் இருந்து வந்தேன் என்றால், சரியல்ல. **வா.சா.ஆ.1** கிரைய

ஒப்பந்த பத்திரத்தை முறியடிப்பதற்காகத்தான் வாதி ஒருஉறுதிமொழி பத்திரம் எழுதிக்கொடுத்ததாக பொய்யாக வழக்கை முன்னிலைப்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அதிகப்படியான பணத்தை 1ம் வாதியிடம் கேட்ட காரணத்தினால் **வா.சா.ஆ.1** கிரைய ஆவணத்தின்படி கிரையம் முடிக்காமல் போய்விட்டது என்று சொன்னால் சரியல்ல. எனவே வாதிகள் கோரியுள்ள தொகையை திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.04 18:37:06 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.